

சென்னை மூலக்கடையில் நடைபெற்ற,பெரம்பூர் தெற்குப் பகுதி 44 ஆவது வட்டக் கழகச் செயலாளர்,சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் ஆ.இராசலட்சுமி இணையரின் மகள் ஆ.தமிழ்பொன்னி கு.விக்னேஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி.ஜி.செல்வராஜ், கழகப் பொதுக்குழு உறுப்பினர் டி.கமலக்கண்ணன், பகுதிப் பிரதிநிதி ப.பிரதீப், பகுதி சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் ஆ.ராதாகிருட்டிணன் தொ.மு.ச. ஜே.அரிதாஸ்,எஸ்.பிரதாப் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

சென்னையில் பள்ளிவாசல்கள் மீது தொடர் தாக்குதல்கள்! தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எங்கே?

சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கு பாதுகாப்பு எங்கே?

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 28-

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நேற்று மாலை சென்னை கோயம்பேடு ஜெய்நகர் பகுதியில் அமைந்துள்ள மஸ்ஜித்இ ஷா நூர் பள்ளிவாசலுக்குள் புகுந்த ஒரு நபர் அங்கு பணியிலிருந்த இமாமைத் தாக்கி, பள்ளிவாசல் பொருட்களைச் சேதப்படுத்திய சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பள்ளிவாசலுக்குள் உருட்டுக்கட்டையுடன் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதாகக் கைது செய்யப்பட்டுள்ள நபர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக காவல்துறை உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினேன். தமுமுக நிர்வாகிகள் மற்றும் பள்ளிவாசல் ஜமாஅத் நிர்வாகிகளும் உரிய நடவடிக்கைக்காகக் காவல்துறையிடம் வலியுறுத்தினர்.

ஒரு பதினைந்து நாட்களுக்குள் சென்னையில் பள்ளிவாசல் மீது நடைபெறும் இரண்டாவது தாக்குதல் இது என்பது மிகுந்த கவலையளிக்கிறது.

கடந்த அக்டோபர் 14ஆம் தேதி சென்னை வடபழனி கங்கை அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று காவல்துறை தரப்பில் கூறப்பட்டது. தற்போது ஜெய்நகர் பள்ளிவாசலில் மற்றொரு தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

தொடர்ச்சியாக நடைபெறும் இத்தகைய சம்பவங்களைத் தனித்தனி நிகழ்வுகளாக மட்டும் கருதிவிட்டு, ஒவ்வொரு முறையும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் மனநிலையைச் சுட்டிக்காட்டி விவகாரத்தை முடித்துவிட முடியாது. இத்தாக்குதல்களின் பின்னணி, நோக்கம், திட்டமிடல் மற்றும் சாத்தியமான தொடர்புகள் குறித்து சிறப்பு புலனாய்வு குழு அமைத்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

பள்ளிவாசல்களுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தும் அளவுக்கு சிலருக்குத் துணிச்சல் த.வெ.க. ஆட்சியில் ஏற்படுவது ஏன்? இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க காவல்துறை என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? இந்தக் கேள்விகளுக்கு அரசு பதிலளிக்க வேண்டும்.


ஜெய்நகர் பள்ளிவாசல் தாக்குதலில் கைது செய்யப்பட்ட நபர் மீது, விசாரணையில் வெளிப்படும் ஆதாரங்கள் மற்றும் சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல்கள் நிகழாமல் தடுப்பதற்கான அவசியம் கருதி தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அவரைக் காவலில் வைக்க காவல்துறை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் எந்த மதத் தினரின் வழிபாட்டுத் தலமாக இருந்தாலும் அதன் பாதுகாப்பில் சமரசம் இருக்கக் கூடாது. பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் தொடர்வதைத் தடுக்கத் தமிழக அரசு உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு தாக்குதலை அலட்சியப்படுத்தினால், அடுத்த தாக்குதலுக்கு அது துணிச்சலாக மாறிவிடக் கூடாது. சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்; சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா: திருமழிசை மின் மயானத்தில் கரண்ட் இல்லாம ரெண்டு மணி நேரமா அப்பாவோட பிணத்தை எரிக்க முடியாம கடைசியிலே சொந்த செலவுலே ஜெனரேட்டர் வாங்கி வந்து எரிக்க ஏற்பாடு பண்ணி இருக்காரு அவருடைய மகன். ஆனால் மின்சார வாரியம் தான் ஜெனரேட்டர் ஏற்பாடு செய்ததா சொல்லி மந்திரி புளுகி இருக்காரே?

போண்டி : **ஆமாய்யா; 'கரப்ஷன்' குமார் த.வெ.க. வின் 'கோயபல்ஸ்ஸா' எப்ப மாறினாருன்னு தெரியலை. ஆனா இதைப்பத்தி எல்லாம் ஒண்ணுமே தெரியாதவர் மாதிரி இருக்காரே நீலாங்கரை வீட்டுக்குள்ளே ஒருத்தரு! ஓட்டு போட்டவங்கதான் பாவம்யா!**

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில்

சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர்கள் யோகேஸ்வரி சுந்தரேசன், டி.கே. லதா ஃபிளாரன்ஸ் வேண்டுகோள்!

சென்னை, அக். 28-

சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி மாவட்ட தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள் கூட்டம் நுங்கம்பாக்கம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெருவில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று (28.10.2026) புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே. சிற்றரசு தலைமை வகிக்கிறார். மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் கே.ராணி ரவிச்சந்திரன்,MC,, மாநில மகளிர் அணி வலைதள பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன் மற்றும் டாக்டர் யாழினி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் – குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து 31.10.2026 அன்று காலை 10 மணி அளவில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் யோகேஸ்வரி சுந்தரேசன், டி.கே. லதா ஃபிளாரன்ஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



திருவள்ளூர் அடுத்த பாண்டூரில் அமைந்துள்ள பிரியதர்ஷினி பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பில், 4வது தேசிய பல்மருத்துவ உச்சி மாநாடு (National Dental Summit 4.0) நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து 350க்கும் மேற்பட்ட இளநிலை மற்றும் முதுநிலை பல் மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்கள், பல் மருத்துவ வல்லுநர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் இந்திரா கல்விக் குழுமத்தின் தலைவரும் வி.ஜி. ராஜேந்திரன், கலந்து கொண்டு துவக்கி வைத்தார் கல்லூரி நிர்வாக இயக்குநர் தஇந்திரா இராஜேந்திரன், கல்லூரி முதல்வர் வீரகுமார் , ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி முனைவர் எம்.எஸ். சண்முகம், சிறப்பு அதிகாரி நாராயண பாபு, பேச்சாளர் ஈரோடு மகேஷ் உள்ளிட பலர் பங்கேற்றனர்.

அரசியல் பழிவாங்கும் நோக்கில் – முன்னாள் அமைச்சர்

அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது கண்டனத்திற்குரியது!

ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, அக். 28 -

"அரசியல் பழிவாங்கும் நோக்கில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது செய்யப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியது" என்று ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனர் - தலைவர் இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

அரசியல் பழிவாங்கும் நோக்கில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களைக் கைது செய்திருப்பது கண்டனத்திற்குரியது!

தன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வந்த முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களைக் கைது செய்திருப்பது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையா என்ற வலுவான கேள்வியை எழுப்புகிறது.



தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள், நிர்வாகத் தோல்விகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து எழுந்துள்ள கேள்விகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக இத்தகைய கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ என்ற சந்தேகமும் எழுகிறது.

குற்றச்சாட்டுகள் எவர் மீது சுமத்தப்பட்டாலும், அவை சட்டத்தின் அடிப்படையில் விசாரிக்கப்பட வேண்டும். அதேவேளையில், விசாரணைக்கு ஒத்துழைப்பு அளித்து வரும் ஒருவரைக் கைது செய்வதற்கான காரணங்களும் சட்டத்தின் வெளிச்சத்தில் நியாயப்படுத்தப்பட வேண்டும். சட்டம் என்பது அரசியல் பழிவாங்குவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படக் கூடாது.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தன் மீதான குற்றச்சாட்டுகளைச் சட்டப்படி எதிர்கொள்வார். ஆனால், கைது நடவடிக்கைகள் மூலம் அரசியல் எதிர்ப்பாளர்களை அச்சுறுத்தவும், ஆளும் தரப்பின் மீதான விமர்சனங்களை மழுங்கடிக்கவும் முடியும் என்று யாரேனும் கருதினால், அது ஜனநாயகத்திற்கு எதிரான அணுகுமுறையாகும்.

அரசியல் அதிகாரம் என்பது மக்களுக்குச் சேவை செய்வதற்கானதே தவிர, அரசியல் பழிவாங்குவதற்கானது அல்ல! ஜனநாயகத்தின் மாண்பையும், சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களுக்கே அதிகம் உள்ளது.

எனவே, இந்தக் கைது நடவடிக்கை தொடர்பான சட்டபூர்வமான காரணங்களை வெளிப்படையாக விளக்க வேண்டும் என்றும், சட்டம் அனைவருக்கும் சமமாகச் செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.


'மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதன் மூலமோ, அரசியல் எதிர்ப்பாளர்கள் மீது நடவடிக்கைகளெடுப்பதன்மூலமோ மக்கள் மத்தியில் எழும் அதிருப்தியை அடக்கிவிட முடியாது. ஜனநாயகத்தின் குரலை ஒடுக்க நினைப்பவர்கள் மக்களின் தீர்ப்புக்கு ஒருநாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வண்ணை கே.எஸ்.பாண்டியன்

அக்டோபர் 28 (1952)



கழகத்தில் நீங்காப் பற்றுக் கொண்டு உழைத்தவரும் – சிறந்த பொதுநலத் தொண்டராகிய இவர், கழகம் துவங்கிய காலத்தில், வடசென்னை பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தளரா உழைப்பாளராக இருந்ததுடன், அப்போராட்டத்தில் சிறை சென்ற செயல்வீரர்.

தி.மு.கழகம் தொடக்க நாள் கூட்டத்தை சிறப்புற நடத்த காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

"கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரை இழந்த அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப்பாதையில் அவர் சிந்திய இரத்தத்தை நினைவில் கொண்டு, நாம் சென்று கொண்டிருப்போம்!" என, இவர் எதிர்க்கட்சியினரால் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 9–11–1952 நாளிட்ட "திராவிட நாடு" தலையங்கம் வெளியிட்டு சிறப்பித்தது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

எழும்பூர் தெற்குப் பகுதி, 108வது வட்டச் செயலாளர்

வான்மதி கதிரவன் தாயார் வி.நவநீதம் அம்மாள் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக்.28-


சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி 108வது வட்டச் செயலாளர் வான்மதி கதிரவன் தாயாரும், முன்னாள் வட்ட செயலாளர் கே.எஸ். வான்மதி அவர்களின் மனைவியுமான வி.நவநீதம் அம்மாள் நேற்று 27.10.2026 மதியம் 3 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.



அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று 28.10.2026 மதியம் 4 மணியளவில் 36, ஹரிங்டன் ரோடு செனாய் நகர், அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அரும்பாக்கம் சுடுகாட்டில் தகனம் செய்யப்படுகிறது.

29ஆம் ஆண்டு நினைவு நாள்



28.10.2026

கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

நீங்கள் மறைந்த இந்நாளில் எங்களின்
கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்
என்றும் உங்களின் நினைவில் வாழும் நெஞ்சங்கள்

மகன்கள்: எஸ். சிதம்பரம், எஸ். கந்தக்குமார், பூச்சி எஸ். முருகன்

மகள்கள் : ஸ்ரீமதி பேபி (எ) அன்புத்தங்கை ஸ்ரீமதி வடிவு,
ஸ்ரீமதி சாந்தி, ஸ்ரீமதி ராஜாமணி, ஸ்ரீமதி கற்பகவள்ளி

மற்றும் பேரன், பேத்திகள், மருமகன்கள், மருமகள்கள்